24th March 1955]

SRI S. THINAKARASAMI THEVAR :—" May I know from the Hon. Minister the measures which have been taken in the villages to propagate family planning? Also will the Government come forward to provide some special staff to do more propaganda work about it in the villages? "

MR. SPEAKER :—" This question has already been put."

THE HON. SRI A. B. SHETTY :—" It will take some more time for this scheme to be extended to villages. Unfortunately in the villages they are resorting to artificial abortion."

SRI M. NARAYANA KURUP :—" It has been noticed by experts that birth rate is higher among the poorer classes than among the well-to-do people. Therefore, as part of the scheme of family planning, will the Government take real steps to raise the standard of living of the poorer sections of the people? "

THE HON. SRI A. B. SHETTY :—" Yes, Sir, the object of our Five-Year Plans is also to raise the standard of life of the people. When their living standard goes up, the number of children born to them also diminishes and that is the experience in all civilized countries."

SRI S. RAMALINGAM :—" May I know whether the Government are aware that the womenfolk in the Tamil Nad consider that it is a sin to control birth which they feel is an attempt to murder. If so, what do the Government propose to do in the matter? "

THE HON. SRI A. B. SHETTY :—" The hon. Member is making a confusion between birth control and murder. There is no murder in it as it is only a prevention of conception."

SRI S. RAMALINGAM :—" Preventing birth is considered to be a very great sin by our womenfolk especially in the villages."

THE HON. SRI A. B. SHETTY :—" The hon. Member is not properly informed. Women welcome birth control more than men do. Women in many places in this country have asked for contraceptives. They also want that sterilization should be done by doctors and many men and women are gradually coming to have it done."

DR. K. B. MENON :—" Will the Government do the simple sterilization operation free of cost? "

THE HON. SRI A. B. SHETTY :—" Those who are entitled to free treatment can have it done free of cost."

SRI M. NARAYANA KURUP :—" Has any prescription been discovered as yet which is really not injurious to the health of the person? "

THE HON. SRI A. B. SHETTY :—" Present-day approved methods are safe. They are effective and they are acceptable to most people."

[24th March 1955

Export of onions and chillies.

8-50 a.m. * 1587 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the quota of onion and chillies fixed for the second half of 1954, for export from this State;

(*b*) when the allotment was made;

(*c*) whether the State Government represented to the Centre for increasing the quota; and

(*d*) if so, the result of the representation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The information about fixation of export quotas of onions, chillies and other commodities and the State Government's recommendation in this regard are confidential and it is not in the public interest to disclose these figures.

" (*b*) In respect of chillies, the allotment was made in July and September 1954 and in respect of onions, in November 1954.

" (*c*) Whenever the Government consider that adequate export quota should be allowed with reference to the local production and supply position, they always make representations to the Central Government for increasing the export quota.

" (*d*) The Central Government decide the export policy from an All-India point of view and having full regard to the consumption and requirements of the country, ruling prices at the time of permitting exports and the anticipated effects of exports on price levels."

SRI K. VINAYAKAM :—" Sir, out of the quota of onions allotted for export, the Government of Madras have been pleased to set apart a portion for the co-operative societies operating in the State. Is the Hon. Minister aware of the fact that those societies have misused this privilege and have handed over their permits to the ordinary traders in the State of Madras? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I would like to have notice."

SRI M. KALYANASUNDARAM :—" வெங்காயம், மிளகாய் ஆகியவைகளை இந்த ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு எவ்வளவு மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்டது, சென்னை சர்க்கார் எந்த அளவு சிபார்சு செய்தார்கள் என்பது ரகசியமாக இருந்தாலும்கூட வெங்காயமும், மிளகாயும் நம் ராஜ்யத்தில் மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதினால், அதற்கேற்றபடி ஏற்றுமதி கோட்டாவை மத்திய சர்க்கார் அதிகப்படுத்தி இருக்கிறதா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதுவரை மத்திய சர்க்கார் ஒதுக்கியிருப்பது போதாது என்றும், ஏற்றுமதிக்கு இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்றும் இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்."

24th March 1955]

Sri S. PANCHAKSHARAM :—" Sir, on the last two occasions when export quotas were fixed for the various districts, the district of North Arcot was excluded. Tiruvannamalai and Chengam produce more than 3,000 tons of chillies. Will the Hon. Minister think of apportioning a certain portion of this for export and thus help the North Arcot merchants also? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" Yes, Sir, I shall examine the position with reference to the North Arcot district."

Sri R. KRISHNASWAMI NAIDU :—" நம்முடைய ராஜ்யத்தில் விளையும் மிளகாய் வத்தலின் அளவுக்கேற்றபடி ஏற்றுமதி கோட்டா ஒதுக்கப்படாததால் நம் ராஜ்யத்திலிருந்து வங்காள வியாபாரிகள் மிளகாய் வத்தலை வாங்கிக்கொண்டுபோய் அதை அவர்கள் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை."

Sri S. JAYARAMA REDDIAR :—" எவ்வளவு டன் வெங்காயம் இந்த ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்ற தகவல் ரகசியமாக வைக்கப்பட்டு தெரிவிக்கப்படாமலிருக்கிறது. வங்காளத்திலிருந்து 2,500 டன்னும், ஆந்திராவிலிருந்து 1,250 டன்னும், நம் ராஜ்யத்திலிருந்து 500 டன்னும் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று நான் சொல்லுகிறேன். இது உண்மையாக இருக்குமானால் நம் ராஜ்யத்திலிருந்து அதிகப்படியாக ஏற்றுமதி செய்வதற்கு நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருடன் யோசனை செய்து ஏற்பாடு செய்வார்களா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் சொல்கிறபடி இந்த ராஜ்யத்திலிருந்து 500 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பது சரியல்ல."

Sri A. AIYANAR :—" வெங்காயம், மிளகாய் ஏற்றுமதி செய்வதற்கு ஹரிஜனங்களில் எத்தனை பேர்களுக்கு லைசென்ஸ் வழங்கியிருக்கிறார்கள் ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" அதுபற்றிய விவரம் அரசாங்கத்தினிடம் இல்லை."

Sri P. CHELLATHURAI :—" ' நம்முடைய ராஜ்யத்திற்கு 500 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு கோட்டா அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல ' என்று கனம் அமைச்சரவரர்கள் பதில் சொன்னார்கள். அப்படியானால் நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கியிருக்கும் அளவுதான் என்ன என்று மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ? "

Mr. SPEAKER :—" அதுதான் ரகசியமாக இருக்கிறதென்று மந்திரி அவர்கள் சொன்னார்களே ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" எவ்வளவு ஒதுக்கக்கூடும், எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்பதெல்லாம் இப்பொழுது வெளிப்படுத்துவது சரியல்ல என்று மத்திய சர்க்கார் அபிப்பிராயப்படுகிறது, இந்த சர்க்காரும் அபிப்பிராயப்படுகிறது. ' ஸ்பெகுலேஷன் ' வருமாதலால் வெளிப்படுத்துவது நல்லதல்ல என்று சர்க்கார் அபிப்பிராயப்படுகிறது."

SRI M. KALYANASUNDARAM :—" வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய காலத்தில் கோட்டா நிர்ணயித்திருக்கக்கூடியது அநேகமாக பிரசுரிக்கப்படுகிறது. வியாபாரிகள் விஷயம் தெரிந்தவர்கள். இந்தச் சபையில் சொன்னால் நாட்டுக்கு என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

" வெங்காயம், மிளகாய் வத்தல் ஏற்றுமதி விஷயத்தில் நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கவேண்டிய கோட்டாவைக் குறைத்து, வங்காளத்திற்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக வங்காள வியாபாரிகள் இங்கு வந்து வெங்காயத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள் என்ற விஷயம் மந்திரி அவர்களுக்கு வியாபாரிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மந்திரி அவர்களுக்கு வியாபாரிகள் சமர்ப்பித்திருக்கும் மகஜரின் நகலை நான் பார்த்திருக்கிறேன். ராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இது விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் தகராறை வெளிப்படுத்த வேண்டாம் என்ற ஒரே நோக்கத்திற்காக இது ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் தகராறு எதுவும் இருப்பதாக நான் உணரவில்லை. அதைத் தெரிவிக்கக்கூடாதென்பது ஒன்றுமில்லை. எவ்வளவு கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துவது நல்லதல்ல. Export ble surplus எவ்வளவு என்று இப்பொழுது நாம் சொன்னால் அதிலிருந்து speculation வரும், விலை பாதிக்கப்படும். ஆகவே தான் இந்த விவரங்களையெல்லாம் வெளிப்படுத்துவதற்கில்லை என்று நான் சொன்னேன்.

வியாபாரிகள் எவ்வளவோ விஷயங்களைப்பற்றி தெவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ராஜ்யத்திலிருந்து எவ்வளவு தூரம் ஏற்றுமதி செய்யலாமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதோ அதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக்கொண்டுதான் இருக்கிறது."

a * * * *

* * * *

* * * *

SRI S. RAMALINGAM :—" மிளகாய் ஏற்றுமதி விஷயமாக பல தடவை இந்த சபையில் கேள்வி நேரத்தின்போது வெகு காரசாரமாக வாதம் நடந்திருக்கிறது. அதைத் தணிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" மிளகாய் விஷயம் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ விஷயங்கள் காரசாரமாக பேசப்படுகின்றன. அதற்கு நான் ஒன்றும் செய்வதற்கில்லை."

SRI K. T. RAJU :—" வெங்காய ஏற்றுமதி விஷயமாக கோட்டாவை வெளிப்படுத்தினால் ' ஸ்பெகுலேஷன் ' ஏற்படுமென்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். எத்தனையோ பொருள்கள் விஷயத்தில் ஸ்பெகுலேஷன் நடந்து கொண்டிருக்கிறது. கேவலம் இந்த வெங்காய விஷயத்தில்தானா பெரிய ஸ்பெகுலேஷன் ஏற்பட்டு விடப்போகிறது ? அதைப்பற்றி ஏன் சொல்லக்கூடாது என்று கேட்கிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" வெங்காய உற்பத்தி செய்கின்றவர்களுடைய நன்மையை உத்தேசித்துதான் நான் அம்மாதிரி சொல்லுவதற்கில்லை என்று சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வெங்காய உற்பத்தியாளர்களுடைய நலனில் அவ்வளவு தூரம் அக்கறையில்லாமலிருக்கலாம்."

---

a * * * Expunged as ordered by the Chair.

24th March 1955]

SRI S. DAIVASIGAMONEY :—" Sir, before we think of export, we must think of internal consumption. Sometime ago onion was sold even at Re. 1 per viss. Even now the price of onion is high. I would like to know whether there is sufficient onion for internal consumption so that people in the State of Madras may get it at cheaper price and will the Government see to it that only the surplus is exported? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, that is also taken into account while assessing the exportable surplus."

SRI V. C. PALANISWAMI GOUNDER :—" கோயமுத்தூர் ஜில்லா போன்ற இடங்களில் வெங்காயம் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு தேங்கிக் கிடக்கிறது. வெங்காயம் மிளகாயைப்போல் அல்ல. மிளகாய்க்குக் காரசாரம் உண்டு. வெங்காயத்தை அதிக நாள் ஏற்றுமதி செய்யாமல் வைத்துக்கொண்டிருக்க முடியாது. உடனுக்குடன் ஏற்றுமதி செய்ய வேண்டும். வெங்காயம் கிடைதாங்காத சரக்கு. ஆகவே, வெங்காயத்தைப் பொறுத்த வரையில் உடனுக்குடன் ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்தால் விவசாயிகளுடைய நிலை சரிந்துகொண்டு போவதை ஓரளவு தடுக்கமுடியும் என்பதை சர்க்கார் அறிவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதனால் தான் வெங்காயத்தை இன்னும் எந்த அளவுக்கு அதிகமாக இந்த ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுமதிக் கோட்டாவை அதிகரிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறது."

SRI N. K. PALANISAMY :—" 1952-53-ம் வருஷத்தில் 12,000 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் திடீரென்று சர்க்காருக்குக் கணக்குத் தெரியாமல் 2,500 டன் தான் ஏற்றுமதி செய்தார்கள். அதன் காரணமாக விலை திடீரென்று வீழ்ந்து விட்டது. இந்த ராஜ்யத்தில் எவ்வளவு வெங்காயம் உற்பத்தியாகிறது, எவ்வளவு மிளகாய் உற்பத்தியாகிறது, எவ்வளவு ஏற்றுமதி செய்வதற்கு மிச்சமிருக்கும் என்பதை சர்க்கார் கணக்கெடுத்திருக்கிறதா ? அப்படி இது வரை எடுக்கா விட்டால் இனிமேலாவது கணக்கெடுத்து இங்கிருக்கும் ஜனங்களுக்கு எவ்வளவு தேவை, எவ்வளவு வெளிநாட்டுக்கு அனுப்பலாம் என்று புள்ளி விவரம் சேகரிக்க சர்க்கார் முன் வருவார்களா ? " 9 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சர்க்காரைப் பொறுத்தவரையில் அதை யெல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவு செய்கிறார்கள். ஆனால், கனம் அங்கத்தினர் சர்க்காருக்குக் கணக்குத் தெரியாது என்று நினைக்கிறார். கனம் அங்கத்தினர் தயை கூர்ந்து கணக்குச் சொல்லிக்கொடுத்தால் அரசாங்கம் மேற்கொண்டு செய்யவேண்டியதைச் செய்யலாம்."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. ராஜூ அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது, ' வெங்காயம் உற்பத்தி செய்கின்றவர்கள் பேரில் ஸ்ரீ ராஜூ அவர்களுக்கு அக்கறை இல்லை, சர்க்காருக்குத்தான் அக்கறை இருக்கிறது ' என்று சொன்னார்கள். யாருக்கு அக்கறை இருக்கிறது, யாருக்கு அக்கறை இல்லை, யாருக்கு அக்கறை அதிகம் இருக்கிறதென்பதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம்.

" ஏற்றுமதி கோட்டா விஷயமாக புள்ளி விவரங்கள் வெளியிடுவதற்கில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். டிசம்பர் 1954 வரையுள்ள ஆறு மாதத்திற்குள்ள வெங்காயத்திற்கான ஏற்றுமதி கோட்டாவை நவம்பர் மாதத்தில் திடீரென்று ஒதுக்குவானேன் ? வெங்காயம் இரண்டு

மாதப் பயிர். மாதாமாதம் தனித்தனியாக ஒதுக்கினால் அவ்வப்போது ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக இருக்கும். அந்த யோசனையைக் கைவிட்டு விட்டு திடீரென்று ஆறு மாதக்கோட்டாவைச் சேர்த்து கடைசி மாதத்தில் மொத்தமாக ஒதுக்கியதற்கு மந்திரி அவர்கள் சமாதானம் சொல்வார்களா? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கடைசி மாதத்தில்தான் ஒதுக்கினார்கள் என்று சொல்வதற்கில்லை. இதற்கு முன்பே சிபாரிசு செய்திருக்கிறார்கள். சிபாரிசு செய்த அளவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்து, அதையும் சேர்த்து இந்த அளவுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள்."

SRI S. RAMALINGAM :—" வெங்காயத்தை நறுக்கும்போதுதான் கண்ணில் தண்ணீர் வரும். ஆனால் வெங்காயம் அழுகிப் போயிருப்பதைப் பார்த்தாலே விவசாயிகளுக்குக் கண்ணில் தண்ணீர் வருகிறது. ஆகையினால் அதைத் தடுக்கக்கூடிய அளவில் அதிகமாக ஏற்றுமதி செய்ய மத்திய அரசாங்கத்திற்கு நம் அரசாங்கம் சிபாரிசு செய்வார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" வெங்காயம் அழுகுவதைப் பார்த்தால் விவசாயிகளுக்குக் கண்ணில் தண்ணீர் வரும் என்பது தெரியும். அதனால்தான் ஏற்றுமதி செய்வதை இப்பொழுது இருப்பதைவிட இன்னும் அதிகப்படியாக ஏற்றுமதிக்கு ஒதுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒரு அங்கத்தினருக்கு பதில் சொல்லியிருக்கிறேன்."

SRI N. C. RAMASAMY KANDER :—" செங்கம் தாலூகாவில் மிளகாய் அதிகமாக உற்பத்தியாகிறது. அவைகள் வியாபாரிகளிடம் வந்த பிறகு ஏற்றுமதி கோட்டாவை நிர்ணயிக்கிறார்கள். அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். மிளகாய் அதிகமாக உற்பத்தியாகி இருக்கிறது என்று தெரிந்தவுடனேயும் மிளகாய் விவசாயிகளுடைய கையில் இருக்கும்போதும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் கோட்டாவை நிர்ணயிக்க சர்க்கார் யோசிப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதையெல்லாம் கவனித்துத்தான் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறது."

Repatriates from Ceylon.

* 1588 *Q.*—SRI S. VADIVELU (on behalf of Sri C. Kandasamy) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of persons belonging to this State out of the 2,045 Indians reported to have been repatriated from Ceylon between August 1954 and December 1954;

(*b*) whether any rehabilitation measures were taken by this Government to help these people; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) The number of persons belonging to this State who came to India from Ceylon after receipt of quit notice from the Government of Ceylon during the period from 19th October 1954 to 2nd January 1955 is 2,037.

" (*b*) The answer to the question is in the negative.

"(*c*) In view of the answer to clause (*b*), this question does not arise."